# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 04.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

…………….

**வழக்கு எண்.SA3493/F/2020**

**திரு வ.சந்தாண கிருஷ்ணன் … மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**செயற்பொறியாளர்/ பொது,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகம்,**
**தேனி மின் பகிர்மான வட்டம்,**
**தேனி. … பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **24.11.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **28.01.2020** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **21.03.2020** |

******

## ஆணை

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (04.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு வ.சந்தாண கிருஷ்ணன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர்/ பொது, தேனி மின்பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகம், தேனி ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் **24.11.2019** தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், குற்றச்சாட்டு குறிப்பாணை இணைப்பு - I-ல்

குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பாணை எண். தலைமைப்பொறியாளர்/ பகிர்மானம்/ மதுரை/ து.நி.க.அ/க.மே/இ/கோ.வருவாய் மேம்/டி 8/2019 நாள்.07.01.2019-ன் நகல், குற்றச்சாட்டு குறிப்பாணை இணைப்பு -1ல் குறிப்பிடப்பட்டுள்ள Memo No.SE/TEDC/TNI/DFC/SA.10/F.GI/D.No.003/2019 Dated.08.01.2019-ன் நகல், குற்றச்சாட்டு குறிப்பாணை இணைப்பு-1-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதி குறிப்பிடப்படாத Lr.No.EE/D/TNI/F.DOC//D.No.126/19-ன் நகல், இணைப்பு (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வு கமிட்டியின் அறிக்கையின் நகல், இணைப்பு (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வு கமிட்டியில் இடம் பெற்றுள்ள அலுவலர்கள் பெயர் பட்டியல் விபரம், குறிப்பாணையில் உள்ள அட்டவணையில் கண்ட மின் இணைப்பு எண்.501-015-89-க்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்ட Working Sheet நகல், மின் இணைப்பு எண்.501-015-89-க்கு அன்றைய பிரிவு அலுவலர்/ வருவாய் பிரிவு செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ தேனி ஆகியோர்களின் Bill Revision செய்து போடப்பட்ட Calculation Sheet நகல் தொடர்புடைய தகவல்களை 14 இனங்களில் வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர் (பொது) தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகம், தேனி மின்பகிர்மான வட்டம், தேனி என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 22.01.2020 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரின் தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 28.01.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகம், தேனி மின்பகிர்மான வட்டம், தேனி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 14.03.2020 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். அதில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 21.03.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (04.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, தனக்கு பொதுத் தகவல் அலுவலர் சரியான தகவல் வழங்காததால் தான் கோரிய இனங்களுக்கு சரியான தகவலை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளருக்கு 20.01.2020 தேதியிட்டு தகவல் வழங்கியிருப்பதாகவும் மேலும் ஆணையம் உத்தரவிட்டால் விரிவான தகவலை வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 24.11.2019 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுமையாகவும், விரிவாகவும் **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை**

அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

- மேல்முறையீட்டாளர் 24.11.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுக்களில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA3493/F/2020**

**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்/**
**செயற்பொறியாளர்/ பொது,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகம்,**
**தேனி மின் பகிர்மான வட்டம்,**
**தேனி.**

**மனுதாரர்**
**திரு வ.சந்தான கிருஷ்ணன்,**
**த/பெ.வரதராஜ்,**
**அமராவதி பள்ளித் தெரு,**
**கோடாங்கிப்பட்டி அஞ்சல்,**
**தேனி மாவட்டம் - 625 547.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-17.11.2020